ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2059/50 - 2018 පෙබරවාරි මස 22 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.02.22
*2059/50 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு தெஹிவளை- கல்கிஸ்சை கழிவுநீர் அகற்றும் கருத்திட்டத்தின் கீழ் 11 ஆம் இலக்க நீர் இறைக்கும் இயந்திரசாலையை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக் கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.*

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்
அமைச்சர்.

நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
இல. 35, "லக்திய மெதுர", புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2018, பெப்புருவரி 16,
5/2/2/1326.

**அட்டவணை**

கொழும்பு மாவட்டத்தில், தெஹிவளை பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 537, விலவல கிராம அலுவலர் பிரிவில், களுபோவிலை கிராமத்தில் ஸ்ரீ மஹா விகாரை வீதியில் அமைந்துள்ள அண்ணளவாக 10 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தைக் கொண்ட பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.

| | | |
|---|---|---|
| வடக்கு | : | இக்காணியின் மீதமாயுள்ள பகுதி ; |
| கிழக்கு | : | இக்காணியின் மீதமாயுள்ள பகுதி ; |
| தெற்கு | : | நீரோடைக் காப்புச்சுவர் ; |
| மேற்கு | : | நீரோடைக் காப்புச்சுவர். |

*காணிக்கு உரிமைகோருகின்றவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் : கண்டறிய முடியவில்லை.*

*3- 415*

1A - G 27175 — 51 (2018/02)
*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு தெஹிவளை - கல்கிஸ்சை கழிவுநீர் அகற்றும் கருத்திட்டத்தின் கீழ் 2 ஆம் இலக்க நீர் இறைக்கும் இயந்திரசாலையை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக் கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்
அமைச்சர்.

நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
இல. 35, "லக்திய மெதுர", புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2018, பெப்புருவரி 16.
5/2/2/1321.

**அட்டவணை**

கொழும்பு மாவட்டத்தில், இரத்மலானை பிரதேச செயலாளர் பிரிவில், மேற்கு கவ்டான கிராம அலுவலர் பிரிவில், கவ்டான கிராமத்தில் அமைந்துள்ள அபேசேகர மாவத்தை மற்றும் குணவர்தன மாவத்தை இரண்டையும் இணைக்கின்ற ஒழுங்கையில் அமைந்துள்ள அண்ணளவாக 10 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தைக் கொண்ட பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.

வடக்கு : சரளைக்கற் பாதை;
கிழக்கு : இக்காணியின் மீதமாயுள்ள பகுதி ;
தெற்கு : அபேசேகர மாவத்தை, குணவர்தன மாவத்தை இரண்டையும் இணைக்கின்ற ஒழுங்கை;
மேற்கு : அபேசேகர மாவத்தை, குணவர்தன மாவத்தை இரண்டையும் இணைக்கின்ற ஒழுங்கை.

காணிக்கு உரிமைகோருபவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் : கண்டறிய முடியவில்லை.

3- 416

---

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு தெஹிவளை- கல்கிஸ்சை கழிவுநீர் அகற்றும் கருத்திட்டத்தின் கீழ் 5 ஆம் இலக்க நீர் இறைக்கும் இயந்திரசாலையை நிர்மாணிப்பதற்காக, காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக் கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்
அமைச்சர்.

நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
இல. 35, "லக்திய மெதுர", புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2018, பெப்புருவரி 16.
5/2/2/1323.

**அட்டவணை**

கொழும்பு மாவட்டத்தில், தெஹிவளை பிரதேச செயலாளர் பிரிவில், தெஹிவளை கிழக்கு கிராம அலுவலர் பிரிவில், ரணஜயகம கிராமத்தில் அமைந்துள்ள இலக்கம் 11/4 B காணிக்கு அருகாமையிலுள்ள காணியிலிருந்து 6 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.

| | | |
|---|---|---|
| வடக்கு | : | வீடுகளுக்குச் செல்லும் பாதை ; |
| கிழக்கு | : | ரணஜயகம வீதி ; |
| தெற்கு | : | இலக்கம் 11/4 B, காணி ; |
| மேற்கு | : | இக்காணியின் மீதமாயுள்ள பகுதி. |

காணிக்கு உரிமைகோருகின்றவரின் பெயரும் முகவரியும் : கண்டறிய முடியவில்லை.

3- 417

---

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு குண்டசாலை- ஹாரகம நீர் வழங்கல் கருத்திட்டத்தின் கீழ் உத்தேச புதிய கொலொன்கஸ்வத்த சேவை நீர்த்தேக்கத்தினை மற்றும் உட்செல்லும் பாதை ஆகியவற்றை நிர்மாணிப்பதற்காக மாற்றீடான காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக் கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்
அமைச்சர்.

நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
இல. 35, "லக்திய மெதுர", புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2018, பெப்புருவரி 16.
5/2/2/1348.

**அட்டவணை**

கண்டி மாவட்டத்தில், குண்டசாலை பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 701, இஹலவெல கிராம அலுவலர் பிரிவில், கொலொன்கஸ்வத்த கிராமத்தில் கொலொன்கஸ்வத்த என்றழைக்கப்படுகின்ற காணியின் முழு விஸ்தீரணத்தில் இருந்து அண்ணளவாக 2 றூட் விஸ்தீரணத்தைக் கொண்ட பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள மூன்று காணிப்பகுதிகள்.

**1. துண்டு இலக்கம் : 01 - விஸ்தீரணம் : 1 றூட் 6 பேர்ச்சஸ்**

| | | |
|---|---|---|
| வடக்கு | : | குறித்த காணியின் மீதமாயுள்ள பகுதி மற்றும் திரு. M. G. U. M. ராஜபக்ஷ உரிமைகோருகின்ற காணி ; |
| கிழக்கு | : | திரு. M. G. U. M. ராஜபக்ஷ உரிமைகோருகின்ற காணி ; |

தெற்கு : திருமதி R. M. U. A. கான்திலகா உரிமைகோருகின்ற காணி மற்றும் சுவீகரித்துக் கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள துண்டு இலக்கம் 2 ;

மேற்கு : குறித்த காணியின் மீதமாயுள்ள காணிப்பகுதி.

*காணிக்கு உரிமைகோருகின்றவரின் பெயரும் முகவரியும் : 1. திரு. எம். பீ. எஸ். உதயகுமார,*
இலக்கம் : 04, கொலொன்கஸ் வத்த,
கென்கல்ல மற்றும் பலர்.

**2. துண்டு இலக்கம் : 02 - விஸ்தீரணம் : 15 பேர்ச்சஸ்**

வடக்கு : சுவீகரித்துக் கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள துண்டு இலக்கம் 01 ;

கிழக்கு : குறித்த காணியின் மீதமாயுள்ள காணிப்பகுதி ;

தெற்கு : குறித்த காணியின் மீதமாயுள்ள காணிப்பகுதி ;

மேற்கு : கொலொன்கஸ் வத்த வீதி.

*காணிக்கு உரிமைகோருகின்றவரின் பெயரும் முகவரியும் : 1. திருமதி R. M. U. A. கான்திலகா,*
இலக்கம் : 06, கொலொன்கஸ் வத்த,
கென்கல்ல, மற்றும் பலர்.

**3. துண்டு இலக்கம் : 03 - விஸ்தீரணம் : 11 பேர்ச்சஸ்**

வடக்கு : குறித்த காணியின் மீதமாயுள்ள காணிப்பகுதி ;

கிழக்கு : குறித்த காணியின் மீதமாயுள்ள காணிப்பகுதி ;

தெற்கு : சுவீகரித்துக் கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள துண்டு இலக்கம் 01 ;

மேற்கு : குறித்த காணியின் மீதமாயுள்ள காணிப்பகுதி.

*காணிக்கு உரிமைகோருகின்றவரின் பெயரும் முகவரியும் : 1. திரு. எம். பீ. எஸ். உதயகுமார,*
இலக்கம் : 04, கொலொன்கஸ் வத்த,
கென்கல்ல மற்றும் பலர்.

*3- 418*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.